# திருக்குறள்

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

## விளக்கம்:-

குழல் இசை இனியது, யாழின் இசை இனியது என்பார்கள். ஆனால் இவற்றை விட இனியது சிறு குழந்தைகள் பேசக்கூடிய சொற்கள் ஆகும்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

**விளக்கம்:-**

தன் மகனை பிறர் பாராட்டும் பொழுது கிடைக்கும் மகிழ்ச்சி அவனை பெற்றெடுத்த பொழுது கிடைக்கும் மகிழ்ச்சியை விட அதிகம்

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்

வானம் வழங்கா தெனின்.

**விளக்கம்:-**

மழை பெய்யாவிட்டால் பிறருக்கு பொருட்களை வழங்கவும் முடியாது. தனக்காக தவமும் செய்ய முடியாது.

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

**விளக்கம்:-**

எலும்பு இல்லாத புழுக்களை வெயிலில் போட்டால் துடிதுடித்து இறக்கும். அதுபோல அன்பு இல்லாதவர்களை அறக்கடவுள் துடிதுடிக்க வைப்பார்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து.

## விளக்கம்:-

அனிச்சம் பூவை முகர்ந்து பார்த்தால் உடனே வாடிவிடும். அதுபோல வீட்டிற்கு வரும் உறவினர்களை சிறிது முகம் சுளிர்த்து பார்த்தாலும் அவர்கள் மனம் வாடிவிடும்.